மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 51/2022

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : கிராம நிர்வாக அலுவலர் (கல்லுமடம் ) (வா.சா.5)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

26.08.2025

**முதல் விசாரணை –**

நான் கல்லுமடம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். வட்டாட்சியர் உத்தரவின்பேரின் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பட்டா எண். 216 புல எண்.36/9 பி, 37/4A1 ஆகிய இரண்டு சர்வே எண்களும் யார் பெயரில் தற்போது உள்ளது என்றால் பூவலிங்கம் மகள் பேச்சியம்மாள் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி பட்டாக்கள் பேச்சியம்மாள் பெயரில் 1983லிருந்து இன்றையதேதி வரை பட்டா இருந்து வருகிறது. 1983வருட விபரங்கள் எங்களது ஆவணங்களில் இருக்காது என்றால் சரிதான். 1983ம் வருடத்திற்கு முந்தைய ஆவண விபரங்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் உள்ள ஆவண காப்பகத்தில்தான் இருக்கும்.